


முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு 2030 கனவுகள் மெய்ப்படும் விழாவினைத் தொடர்ந்து, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டத்திற்குட்பட்ட புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாக சிவகங்கை மாவட்டத்தின் திட்ட செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து, தொகுக்கப்பட்டுள்ள ஐந்தாண்டு சாதனை மலரினை வெளியிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் உட்பட துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள் பலர் உள்ளனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், தலைமையில் மதுரை மாவட்டம், நீர்வளத்துறை சார்பில் 30.92 கோடி மதிப்பீட்டில் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடி கிராமம் TM நகர் மற்றும் லேக் ஏரியா நகரில் ஈச்சனோடை, உத்தங்குடி கண்மாய் உபரிநீர் வாய்க்கால் மற்றும் சாத்தையார் ஓடை வண்டியூர் கண்மாயில் நுழையும் இடத்தில் தடுப்புச்சுவர் கட்டி நிரத்தர வெள்ளத்தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கான பணிகளை துவக்கி வைத்து பார்வையிட்டார் உடன் சசிகுமார், வீரராகவன், தனராஜ் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்



இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழு கூட்டம்! மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ.தலைமையில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில்,நடைபெற்றது இக்கூட்டத்தில் திருச்சியில் நடைபெறும் மாநில மாநாட்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து பெரும் திரளான தொண்டர்கள் நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது மேலும் ஸ்டாலின் மகளிர் படையின் மூலம் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளிலும் தீவிர பிரச்சாரம் செய்வதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இக்கூட்டத்தில், செ.முருகேசன் எம்.. எல்.ஏ, சுந்தர்ராஜன், பவானி ராஜேந்திரன், திவாகர், வ. து. ஆனந்த், ரவிச்சந்திர ராம வன்னி, மிசா அகமது தம்பி மற்றும், தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் திருவாடனை தொகுதி பார்வையாளர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), வேல்முருகன் முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர், மேலும் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர.பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளார்கள், துனை அமைப்பாளார்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளார்கள் அனைவரும் கலந்து கொண்டனர் .



நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க.அலுவலகம் கலைஞர் அரங்கில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில்,நெல்லை வடக்கு மாவட்ட பா.ஜ.க.தகவல்துறை தலைவர் தெற்கு கல்லிடைக்குறிச்சி முத்துப்பாண்டி தலைமையில் 20 பா.ஜ.க.வினர் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.அவருடன் மூலச்சி ஊராட்சி நெசவாளர் காலனியை சேர்ந்த ராமச்சந்திரன், பொன்னுத்துரை,எப்சன் ராஜ், முருகேசன்,ராஜா,ஆறுமுகம்,மூர்த்தி, குமார் ஆகியோரும் கழகத்தில் இணைந்தனர்.இதற்கான ஏற்பாடுகளை சேரன்மகாதேவி மேற்கு ஒன்றிய மாவட்ட பிரதிநிதி சீவலமுத்து செய்திருந்தார்.



இனமான பேராசிரியர் அவர்களின் 6 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்டம் அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இனமான பேராசிரியர் அவர்கள் திருவுருவப்படத்திற்கு தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே. ஜெயபாலன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப் பட்டது.நிகழ்வில் கென்னடி சீனித்துரை,சேக் முகமது, வெங்கடேசன் உள்பட அணி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருச்சியில் நடைபெற உள்ள கழக மாநில மாநாட்டில் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (9ஆம் தேதி) 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்பது தொடர்பான மதுரை வடக்கு மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., கே.தனச்செல்வம், புதூர் சேகர், ஆனந்த், விஜய கதிரவன், மதுரை பாலா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்டம் தமுக்கம் மைதானம் வாசலில் பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று பயணியர் நிழற்குடை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவை மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ தளபதி எம்எல்ஏ கலந்து கொண்டு துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் ரவீந்திரன், முத்து கணேஷ் ஆறுமுகம் அறிவு நிதி முத்து மோகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர் .



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் ஒன்றிய அ.தி.மு.க. பொருளாளர் வழக்கறிஞர் பரணி தலைமையில் அ.தி.மு.க. பா.ம.க. டி.வி.கே. கட்சிகளில் இருந்து 50 க்கு மேற்பட்டோர் தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இந்த நிகழ்வில் ஒன்றியக் கழக செயலாளர் தங்கபாண்டியன், சுருளிப்பட்டி கிளைச் செயலாளர் காந்தி ராஜன், புதுப்பட்டி பேரூர் செயலாளர் எம்.டி.எம்.பார்த்திபன் மற்றும் ஜெயபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



கன்னியாகுமரி மாவட்ட சமத்துவ மக்கள் கட்சி துணை செயலாளர் ராயல் ஜெயசிங் மற்றும் பீமநேரி முன்னாள் ஊராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. சுபா இவர்களின் ஏற்பாட்டில் தோவாளை கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வம் தலைமையில் அ.தி.மு.க மற்றும் சமத்துவ மக்கள் கட்சியை சேர்ந்த 50க்கு மேற்பட்டவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் ,மேயர் ரெ.மகேஷ் முன்னிலையில் கழகத்தில் இணைத்து கொண்டனர். உடன் பொதுக்குழு உறுப்பினர் ஞானபாய், மாவட்ட பிரதிநிதி ரஹ்மான், இம்மானுவேல், கல்யாணசுந்தரம் கழக நிர்வாகிகள் ஷேக், ஆசீர்.மகேஷ், பிரைட், சங்கர நாராயணன், மாதவன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், வேம்பார் ஊராட்சியில் தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் ரூ11 கோடியில் தற்காலிக முகத்துவாரம் மற்றும் மீன்பிடி இறங்குதளத்தில் தூர்வாருதல் பழுதடைந்த அணுகு சாலைகள் மற்றும் படகு ஆணையும் தளம் சீர்மைகதும் பணியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்ததை தொடர்ந்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்க்கண்டேயன் பணிகளை துவக்கி வைத்தார்.நிகழ்வில் மீன்வளத்துறை துணை பொறியாளர் வள்ளி ஒன்றிய செயலாளர்கள் சின்னமாரிமுத்து, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.